

விழுப்புரம் ( தெற்கு ) மாவட்டக் கழகத்தின் சார்பில் முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழா மற்றும் கழக பவள விழாவை முன்னிட்டு மாவட்டப் பொறுப்பாளர் டாக்டர்.பொன்கௌதமசிகாமணி தலைமையில் திருவெண்ணெய்நல்லூர் ( மேற்கு ) ஒன்றியத்தில் வளையாம்பட்டு, மேலமங்கலம், செம்மார், ஏனாதிமங்கலம், ஏமப்பூர் ஆகிய ஊராட்சிகளில் கழகத் துணைப் பொதுச் செயலாளர் உயர்கல்வித்துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி கழகக் கொடி ஏற்றி இனிப்புகளை வழங்கினார். ம.ஜெயசந்திரன், இரா.ஜனகராஜ், செ.புஷ்பராஜ், டி.என்.முருகன், தயா.இளந்திரையன், பி.வி.ஆர்.சு.விஸ்வநாதன், ஜி.இரவிச்சந்திரன், ஓம்சிவசக்திவேல், பக்தவச்சலம், ஒன்றிய நிர்வாகிகள் சடகோபன், கிருஷ்ணமூர்த்தி, காசி விசுவநாதன், செ.தினகரன், சுவை.சுரேஷ், ப.அன்புரசு, கிருஷ்ணா ராஜ், தேவா, பொறியாளர் அணி ஆனந்த், மாவட்ட சுற்றுச்சூழல் அணி சந்திரசேகர், நிர்மல் ராஜ், ராஜசேகர், கருணாநதன், ரங்கநாதன், கோதண்டபாணி, விசுவநாதன், பன்னீர், பழனி, காத்தமுத்து, சரவணன், ஆறுமுகம், ராமலிங்கம், இலட்சுமணன், சிவா, செந்தில் கௌரி சின்னராசு, மணிகண்டன், சிபாராணி ஏழுமலை, விஜயன், தேவி செந்தில் ஒன்றிய குழு உறுப்பினர் சரவணன், சுபாஷ்நகர குணா, வெங்கடேசன், கார்த்திகேயன், ஏழுமலை மற்றும் கழக நிர்வாகிகள் உடனிருந்தனர்.





திருப்பூர் தாராபுரம் சாலையில் அமைந்துள்ள திருப்பூர் தெற்கு மாவட்டக் கழக அலுவலகமான கலைஞர் அறிவாலயத்தில் ஒன்றிய, நகர, பேரூர் கழக மாணவர் அணி அமைப்பாளர், துணை அமைப்பாளர்களுக்கான நேர்காணல் மாவட்டக் கழக செயலாளர், மாநகராட்சி 4ம் மண்டலத்தலைவர் இல.பத்மநாபன் தலைமையில், மாவட்ட மாணவரணி அமைப்பாளர் குகன் வரவேற்புரையில், கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், கழக மகளிர் அணி துணை செயலாளர், ஆதிதிராவிட நலத்துறை அமைச்சர் என்.கயல்விழி செல்வராஜ், கழக மாணவர் அணி இணை செயலாளர் எஸ்.மோகன், துணை செயலாளர்கள் கா.பொன்ராஜ், வி.ஜி.கோகுல், ஆனந்த், வீரமணி ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. இதில் மாவட்ட கழக நிர்வாகிகள், மாவட்ட மாணவர் அணி துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.

### உலக நாடுகளுக்கெல்லாம் முன் உதாரணமாக

# திராவிட மாடல் அரசின் ‘காலை சிற்றுண்டி திட்டம்’ விளங்குகிறது!

### அமைச்சர் செஞ்சி மஸ்தான் பெருமிதம்!



கள்ளக்குறிச்சி, செப்.23-

கள்ளக்குறிச்சியில் உள்ள ஏ.எல்.சி சமுதாயக் கூடத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற தமிழ்நாடு கிறிஸ்தவ சபைகள் கூட்டமைப்பின் கள்ளக்குறிச்சி மாவட்ட அறிமுக விழாவில், தெற்கு மற்றும் வடக்கு மாவட்ட கழக செயலாளர்கள் வசந்தம் க.கார்த்திகேயன் எம்.எல்.ஏ, தா.உதயசூரியன் எம்.எல்.ஏ ஆகியோர் தலைமையில், நாடாளுமன்ற உறுப்பினர் தே.மலையரசன் முன்னிலையில் சிறுபான்மை துறை அமைச்சர் செஞ்சி கே.எஸ்.மஸ்தான் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டார்.

மேற்கொண்டு அமைச்சர் செஞ்சி மஸ்தான் பேசுகையில் நமது திராவிட மாடல் அரசு எல்லோருக்கும் எல்லாம் கிடைக்க வேண்டும் என்ற உயரிய நோக்கத்தில் செயல்பட்டு வருகிறது, அதற்கு ஒரு உதாரணம் காலை சிற்றுண்டி திட்டம் கனடா நாட்டில் அந்நாட்டின் அதிபர் பள்ளிகளில் காலை உணவு திட்டத்தை செயல்படுத்துகிறார், பிறகு அதன் செய்தியாளர் சந்திப்பில் தெரிவிக்கும் போது இந்தியாவில் அதுவும் தமிழ்நாட்டில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கொண்டு வந்த காலை சிற்றுண்டி திட்டம் தான் இந்த திட்டம் என்று தெரிவித்தார், ஆகவே உலக நாடுகளுக்கு எல்லாம் முன் உதாரணமாக நமது காலை சிற்றுண்டி திட்டம் விளங்குகிறது என்று பெருமிதமாக பேசினார், மேலும் 2000 ஆண்டுகளுக்கு முன் அயன் திருவள்ளுவர் எழுதிய திருக்குறளை செவி சாய்த்து அதனை திட்டமாக செயல்படுத்துகின்ற காலம் முத்தமிழ் அறிஞர் கலைஞருடைய நூற்றாண்டு காலம், கலைஞர் அவர்கள் தான் சிறுபான்மை மக்களுக்கு அரனாக இருந்தவர் என்பது உங்களுக்கே தெரியும், பேரறிஞர் அண்ணா அவர்கள் சொன்னார் ஒன்றே குலம் ஒருவனே தேவன், ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம், அண்ணா அவர்கள் முதலமைச்சராக பொறுப்பேற்ற பின்னர், தாழ்ந்து கிடந்த தமிழகத்தை தலை நிமிர வைப்பதற்காக நாம் அனைவரும் ஒன்றாக பயணித்து ஏழ்மையிலே, வறுமையிலே ,இல்லாமையிலே கல்லாமையிலே ,அறியாமையிலே இருக்கின்ற தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட, ஒடுக்கப்பட்ட மக்களை கல்வியின் மூலமாக சம நிலைக்கு கொண்டு வர வேண்டும் என்று அண்ணா அவர்கள் அன்று சொன்னார்கள், அன்புத் தம்பிமார்கள் என்று அழைத்தார், ஒரு தாய் வயிற்றில் பிறக்க இடம் இல்லாத காரணத்தினால் தனித்தனி தாய் வயிற்றில் பிறந்த சகோதரர்கள் என்று அண்ணா அவர்கள் சொன்னார், அதைத்தான் உடன்பிறப்பே என்று முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் சொன்னார், கலைஞரின் மகனான முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் பெரியாராக, அண்ணாவாக, கலைஞராக செயல்பட்டு வரும் நமது திராவிட நாயகர்,

சமூக நீதி காவலர், கழகத் தலைவர், தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உங்களில் ஒருவன் என்று சொல்கிறார், அதே போல் திருச்சபையின் மூலம் நீங்கள் எந்த அளவிற்கு என்னை நீங்கள் நேசிக்கிறீர்களோ அந்த அளவிற்கு உங்களை நான் நேசிக்கிறேன், இங்கு ஒரு சிலர் உரையாற்றும் போது கிறிஸ்தவ மதத்தில் பணம் கொடுத்து சேர்த்து விடுவதாகவும் அதனால் மற்ற மதத்தின் உரிமைகளை பறிக்கப்படுவதாகவும் ஒரு மாயை ஒரு அச்சத்தை சிலர் உருவாக்கி வருகின்றனர் என்ற செய்தியை வேதனையுடன் இங்கு பதிவு செய்தனர், அவர்களுக்கு நான் ஒன்று சொல்ல கடமைப்பட்டுள்ளேன் அவர் அவர்கள் மார்க்கத்தில் இருக்கின்ற உயர்ந்த கோட்பாடு களுக்கு யாரும் எந்த காலத்திலும் ஒரு சிறிதளவு கொச்சைப்படுத்துகின்ற வகையில் செல்ல மாட்டார்கள், மேலும் மதம் மாறிய ஆதி திராவிட மக்களை ஆதி திராவிடர்களாகவே கருத வேண்டும் என்கிற கோரிக்கையை ஒன்றிய அரசாங்கத்திற்கு வலியுறுத்தி தமிழ்நாட்டு சட்டப்பேரவையில் வரலாற்று சிறப்புமிக்க ஒரு தீர்மானம் நிறை வேற்றப்பட்டு உள்ளது என்பதை இந்த நேரத்தில் சொல்ல நான் கடமைப்பட்டுள்ளேன்,

இந்த கோரிக்கை இந்தியாவில் வேற எந்த மாநிலத்திலும் இதனை நிறைவேற்றவில்லை என்பதை தெரிவித்துக் கொள்கிறேன், உரிமைக்கு குரல் கொடுப்போம் என்ற கொள்கையின் அடிப்படையில் நமது தமிழக முதலமைச்சர் இந்தியாவிலே தமிழ்நாடு தான் முதல் தீர்மானம் இயற்றப்பட்டுள்ளது என்ற நல்ல செய்தியை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன், இங்கு வந்து கொண்டிருக்கின்ற அனைத்து சகோதர சகோதரிகளுக்கும் நீங்கள் வைத்த கோரிக்கைகள் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு சென்று அனைத்தும் 100% நிறைவேற்றி தரப்படும் இந்த திருச்சபையில் நீங்கள் அடிக்கடி சொல்வது போல் தட்டுங்கள் திறக்கப்படும் கேளுங்கள் கொடுக்கப்படும் அதுபோல் நீங்கள் கொடுத்த மனுக்களின் கோரிக்கைகள் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் ஆட்சியில் நிறைவேற்றி தரப்படும் என்று பேசினார் மேலும் ஜெருசேலம் செல்வதற்காக நீங்கள் 100 பேர் வேண்டுமென்று சொன்னீர்கள் ஆனால் அதில் ஐந்து மடங்கு உயர்த்தி 500 பேர்கள் ஜெருசேலத்திற்கு செல்வதற்காக நமது திராவிட மாடல் அரசு செயல்படுத்தி உள்ளது என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன், அதனைத் தொடர்ந்து செய்தியாளர் சந்திப்பில் துணை முதல்வராக உதயநிதி ஸ்டாலின் எப்போது ஆவார் என்ற கேள்விக்கு முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் உடன் பிறப்பே என்று அழைத்தார் ஆனால் நமது முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உங்களில் ஒருவன் என்று முத்தமிழ் அறிஞர் கலைஞர் எப்படி ஸ்டாலினை படிப்படியாக வளர்த்து, அமைச்சராக்கி அதற்குப் பிறகு துணை முதல்வராக ஆக்கினாரோ அதுபோல, உதயநிதியை அமைச்சராக்கி, பல்வேறு விமர்சனங்களைத் தாண்டி, தற்போது அவரை துணை முதல்வராக உரிய நேரத்தில் முதலமைச்சர் அறிவிப்பார் என்று தெரிவித்தார்.

மேலும், எல்லோருக்கும் எல்லாம் கிடைக்கக்கூடிய ஆட்சிதான் திமுக தலைமையிலான திராவிட மாடல் ஆட்சி.

கடந்த மக்களவைத் தேர்தலில் தமிழகம் மற்றும் புதுவை உள்ளிட்ட 40 தொகுதிகளிலும் திமுக கூட்டணி அமோக வெற்றி பெற்றது. அதுபோல, வரும் 2026 சட்டப்பேரவைத் தேர்தலில் 234 தொகுதிகளிலும் திமுக கூட்டணி அமோக வெற்றி பெறும். திமுக கொள்கைகள் வெற்றிபெறும் என்று அமைச்சர் செஞ்சி மஸ்தான் தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் மாவட்ட ஒன்றிய நகர பேரூர் கழக நிர்வாகிகள், உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள், சார்பான நிர்வாகிகள், தமிழ் நாடு கிறிஸ்துவ சபையின் கூட்டமைப்பின் தலைவர்கள் நிர்வாகிகள் உறுப்பினர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

### கிச்சிப்பாளையம்

# மொழிப்போர்த் தியாகி பி.ஏ.ராமலிங்கம் மறைவு!

### இரா.இராஜேந்திரன் எம்.எல்.ஏ. அஞ்சலி!



சேலம், செப். 23-

சேலம் மத்திய மாவட்டம் கிச்சிப்பாளையத்தை சேர்ந்த மொழி போர் தியாகி பி. ஏ ராமலிங்கம் ( வயது 85) அவர்கள் உடல் நலிவுற்ற நிலையில் நேற்று காலமானார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

செய்தியறிந்ததும் அன்னாரின் உடலுக்கு மாவட்ட கழக செயலாளர் இரா. இராஜேந்திரன் எம்.எல்.ஏ., மாநகர துணைசெயலாளர். வி. கணேசன், பகுதி செயலாளர் கே.ஜெய், கோட்டச் செயலாளர்கள் ஜி. வெங்கடேசன், சத்யன் உட்பட ஏராளமான கழக தொண்டர்கள் மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினார்கள்.



கழக முப்பெரும் விழா 75 ஆம் ஆண்டு கழக பவள விழாவை முன்னிட்டு கழக தகவல் தொழில்நுட்ப அணி சார்பில் பொள்ளாச்சி அரசு மருத்துவமனையில் ரத்ததான முகாம் நடைபெற்றது. ரத்ததான முகாமை தெற்கு மாவட்டச் செயலாளர் தளபதி முருகேசன், பொள்ளாச்சி நாடாளுமன்ற உறுப்பினர் ஈஸ்வரசாமி, மாநில தகவல் தொழில்நுட்ப இணைச் செயலாளர் டாக்டர் மகேந்திரன் ஆகியோர் துவக்கி வைத்தனர். நகர செயலாளர் நவநீதகிருஷ்ணன் தலைமையில் நகர மன்றத் தலைவர் சியாமளா முன்னிலையில் நடைபெற்ற இரத்ததான முகாமில் ஆதி திராவிடர் நலக்குழு இணைச்செயலாளர் திப்பம்பட்டி ஆறுச்சாமி, IT WING மாவட்ட அமைப்பாளர் ரமேஷ் பாலன், ஒன்றிய செயலாளர் ரமேஷ், பொள்ளாச்சி சித்திக் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### நிவேதா எம்.முருகன் எம்.எல்.ஏ., தலைமை!

# செம்பனார்கோயில் வடக்கு ஒன்றியத்தில் முப்பெரும் விழா - பட்டிமன்றம்!

### நடுவர் - அரசு கொறடா கோவி.செழியன் ! நெல்லிகுப்பம் புகழேந்தி, கரூர் முரளி - நாகைநாகராஜன் - தூத்துக்குடிசரத்பாலா பங்கேற்பு!

மயிலாடுதுறை. செப்.23

மயிலாடுதுறை மாவட்டம் செம்பனார்கோயில் வடக்கு ஒன்றிய தி.மு.க. சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழா மற்றும் முப்பெரும் விழா பொதுக்கூட்ட பட்டிமன்றம் செம்பனார்கேயில் பரசலூர் செல்வம் சதுக்கம் மிசா பி.மதிவாணன் நினைவரங்கத்தில் நடைபெற்றது. விழாவிற்கு மயிலாடுதுறை மாவட்டக் கழகச் செயலாளரும், பூம்புகார் சட்டமன்ற உறுப்பினர் நிவேதா எம்.முருகன் தலைமை தாங்கினார். செம்பனார்கோயில் வடக்கு ஒன்றியக் கழகச் செயலாளர் பி.எம். அன்பழகன் வரவேற்றார். மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் வி.எஸ்.என். செந்தில், மாவட்ட பிரதிநிதிகள் எஸ்.தென்னரசன், ஜி.ஆர்.பிரபாகர், ஒன்றியக் கழக அவைத்தலைவர் இரா.சுப்பையன், துணைச் செயலாளர்கள் எஸ். ஜி . நெடுஞ்செழியன், கே.சத்தயராஜ், அமுதா அன்பழகன், பொருளாளர் ஏ.சரவணன், ஊராட்சி மன்ற தலைவர்கள் பரசலூர் த.சண்முகம், செம்பனார் கோயில் க.தி.விஸ்வநாதன், ஒன்றிய குழு உறுப்பினர் எல்.மணி (எ) செல்வரெத்தினம், ஒன்றிய விவசாய அணி அமைப்பாளர் கோ.கந்தசாமி, மாவட்ட ஆதிதிராவிட நல குழு துணை அமைப்பாளர் ஹிட்லர், கிளை நிர்வாகிகள் சரவணன், கேசவ.பக்கிரி, ஏ.நாகராஜன், எஸ்.முருகன், பி.வீரையன், எஸ்.நாகராஜன், கே.கமராஜன், டி.ரமேஷ், எஸ்.பூங்கொடி, மகேஸ்வரி, என். ராஜமாணிக்கம், ஆர்.காமராஜ், க.சிவா, எஸ்.முத்து லெட்சுமி, வேல்விஜயகுமார், கே.ராசாத்தி, கே.அபிராம சுந்தரி, எஸ்.சரோஜா, க.உத்திராபதி, எஸ்.பாண்டியன், என்.பாலகுமார், கே.சிலம்பரசன், எஸ்.இராமலிங்கம், ஆர்.செந்தில், எஸ்.சசி, வி.ரமாதேவி, தனலெட்சுமி, பி.தேவிகா, ஏ.உமராணி ஆகியோர் முன்னிலை வகிக்கித்தனர். ஒன்றியக் கழகச் செயலளார்கள் செம்பனார்கோயில் தெற்கு எம்.அப்துல்மாலிக் செம்பனார்கோயில் மத்தியம் அமிர்த.விஜயக்குமார் ஆகியோர் தொடக்க உரையாற்றினார்கள். பட்டிமன்ற பொது கூட்டத்தில் இனத்தலைவர் கலைஞர் அவர்களின் இதயம் நிறைந்த தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள், இளம்தலைவர் உதயநிதிஸ்டாலின் இவர்களின் புகழுக்கு பெரிதும் காரணம் மக்கள் பணியா! இயக்கபணியா! பட்டிமன்றம் நடைபெற்றது. பட்டிமன்ற நடுவராக அரசு தலைமை கொறடா கோவி.செழியன். மக்கள் பணியே என்று நெல்லிக்குப்பம் புகழேந்தி, நாகைநாகராஜன், இயக்கப் பணியே என்று கரூர்முரளி, தூத்துக்குடிசரத்பாலா ஆகியோர் வாதிட்டு பேசினார்கள். கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர் குத்தாலம் பி.கல்யாணம், மயிலாடுதுறை நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் செ.இராம லிங்கம், கழக கொள்கை பரப்பு துணைச் செயலாளர் குத்தாலம் க.அன்பழகன், மாநில விவசாய அணி இணைச் செயலாளர் ஆர்.அருள் செல்வம், சட்ட மன்ற முன்னாள் உறுப்பினர் ஏ.சி.என். விஜயபாலன், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் ஜி.என்.ரவி, முத்து.மகேந்திரன், மாவட்டக் கழக அவைத்தலைவர் கே.ஜி.சீனிவாசன், துணைச் செயலாளர்கள் மு.ஞானவேலன், எஸ்.செல்வமணி,

தகவல் தொழில் நுட்ப அணி தஞ்சை மண்டல பொறுப்பாளர் பி.எம். ஸ்ரீதர், மாவட்ட ஊராட்சி குழு தலைவர் உமாமகேஸ்வரிசங்கர், ஒன்றியக்குழு தலைவர் நந்தினிஸ்ரீதர், ஒன்றியக் கழகச் செயலாளர்கள் மங்கை எம்.சங்கர், என்.இளையபொருமாள், மலர்விழிதிருமாவளவன், ஏ.ஜி.ஜெ.பிரபாகர்,

பஞ்சு.குமார், ஞான. இமையநாதன், ப.முருகமணி, ஏ.ஆர்.ராஜா, கு.வைத்தியநாதன், நகரக் கழகச் செயலாளர்கள் குண்டாமணி (எ) என்.செல்வராஜ், ம.சுப்பராயன், பேரூர் கழகச் செயலாளர்கள் எஸ்.கே.முத்துராஜா, எம்.அன்புச்செழியன்,

பொதுக்குழு உறுப்பினார்கள் ஜெ.கபிலன், நத்தம் ஏ.வின்செண்ட், சுபா, அர்சத், பி.சிவதாஸ், அரசு வழக்கறிஞர் இரா. சேயோன், ஒன்றிய குழு துணைத் தலைவர் பி.பாஸ்கரன், தரங்கம்பாடி பேரூராட்சி தலைவர் சுகுணா சங்கரிகுமரவேல், மாவட்ட ஊராட்சி உறுப்பினர்கள் வெண்ணிலாதென்னரசன், ராபியா நர்கீஸ்பானு, துளசிரேகாரமேஷ், மாவட்ட மீனவர் அணி தலைவர் எம். மணிமாறன்,

மாவட்ட சார்பு அணி அமைப்பாளர்கள் மா.வைத்தியநாதன், எம்.கே.மருது, முத்து குபேந்திரன், வெடி எஸ்.பாலமுருகன், இரா. முருகன், ஆர்.எஸ்.ஸ்ரீதர், காளி.தேசப்பன், இரா. செல்வராஜ், மற்றும் ஒன்றிய, நகர, பேரூர் கழகச் நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள், சார்பு அணி நிர்வாகிகள், கிளைக் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர். முடிவில் மாவட்ட வர்த்தக அணி தலைவரும், பரசலூர் கிளை செயலாளர் கே. பாலையா நன்றி கூறினார்.

### வி.ஜி.பி.உலகத் தமிழ்ச் சங்கத்துடன் இணைந்து- ‘கவிதை உறவு’ இலக்கிய அமைப்பு நடத்தும்

# 100 கவிஞர்களுக்கு கலைஞர் விருதுகள்! அமைச்சர் மா.சுப்பிரமணியன் வழங்கி சிறப்புரை!

### டாக்டர் வி.ஜி.சந்தோசம் தலைமையில் நிகழ்ச்சி நடைபெறுகிறது!

சென்னை, செப்.23-

வி.ஜி.பி. உலகத் தமிழ்ச் சங்கத்துடன் இணைந்து ‘கவிதை உறவு’ இலக்கிய அமைப்பு நடத்தும் 100 கவிஞர்களுக்கு கலைஞர் விருது வழங்கும் விழா இன்று (23.9.2024 திங்கட்கிழமை ) மாலை 5.30 மணி அளவில் ராணி சீதை மன்றம், அண்ணா சாலையில் நடைபெறுகிறது.

செல்வி வர்ஷினி ஜி. ஜே.வின் வரவேற்பு நடனத்துடன் துவங்கும் நிகழ்ச்சியில், கர்நாடக இசைப் பாடகி லலிதா மோகன் தமிழ்த்தாய் வாழ்த்து பாடுகிறார்.

கலைமாமணி ஏர்வாடி எஸ். இராதாகிருஷ்ணன் வரவேற்புரையாற்றுகிறார்.

நிகழ்ச்சியில் செவாலியே டாக்டர் வி.ஜி.சந்தோஷம் தலைமையேற்று உரையாற்றுகிறார். டாக்டர் ஜெயராஜமூர்த்தி, கவிச்சுடர் கவிதைப் பித்தன் ஆகியோர் சிறப்புரையாற்றுகின்றனர்.

விழாவில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன் 100 கவிஞர்களுக்கு விருதுகள் வழங்கி வாழ்த்துரை வழங்குகிறார்.

கவிஞர் தமிழ் இயலன், கவிஞர் எஸ்.விஜய கிருஷ்ணன் ஆகியோர் விருதுகள் வழங்கல் குறித்து நெறியாள்கின்றனர்.

புலவர் சு.மதியழகன் நன்றி கூறுகிறார். நிகழ்ச்சியை திருமதி ரேகா மணி தொகுத்து வழங்குகிறார்.

கவிஞர்களும், சுவைஞர்களும், அறிஞர்களும், ஆன்றோர்களுமாய் அரங்கம் நிறைய குழுமி முத்தமிழ் அறிஞர் கலைஞர் புகழ் பாடி போற்றுவோம் வாரீர் என கூல் ஈவன்ட்ஸ் குமார் கேட்டுக்கொண்டுள்ளார்.

### மீஞ்சூரில் பவள விழா கல்வெட்டு

திருவள்ளூர், செப்.23-

தமிழ் நாடு மின் கழக தொமுச மாநில தலைவர் திருவள்ளூர் கிழக்கு மாவட்ட கழக மாவட்ட கழக பிரிதிநிதி செந்தமிழ் கே.சசிகுமார் தலைமையில் மீஞ்சூரில் கழக தலைவர் , இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி, வேண்டுகோளுக்கு இணங்க திருவள்ளூர் கிழக்கு மாவட்ட கழக செயலாளர் டி.ஜெ.கோவிந்தராசன் ஆலோசனை படி திமு கழக பவளவிழா கல்வெட்டு திறந்தும் கழக கொடியை தலைமை பொதுக்குழு உறுப்பினர் கே.எஸ்.மணி ஏற்றி வைத்தார். உடன் மீஞ்சூர் பேரூர் கழக செயலாளர் க.சு.தமிழ் உதயன், மாவட்ட ஆதிதிராவிடர் நலக்குழ தலைவர் மீ.வீ.கோதண்டம் ஆகியோர் முன்னிலையில் மின் கழக தொமுச நிர்வாகிகள் வரவேற்புடன் நடைபெற்றது இதில் மீஞ்சூர் பேரூர் கழக நிர்வாகிகள் மற்றும் மின் கழக தொமுச நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



இராமேஸ்வரம் நகர் அரசு மருத்துவமனையில் நகர்மன்றத் தலைவர் கே.இ.நாசர்கான் ஆய்வு பணிகளை மேற்கொண்டார். மருத்துவர்கள் பற்றாக்குறைக்கு விரைவில் தீர்வு காணப்படும் என உறுதியளித்தும் உள்நோயாளிகளை நேரில் சந்தித்து அவர்களின் குறைகளை கேட்டு அறிந்தார். பிறகு உள்நோயாளிகளுக்கு வழங்கப்படும் உணவு மற்றும் சமையல் அறையை ஆய்வு செய்து சில அறிவுரைகளை வழங்கினார். உடன் அரசு மருத்துவமனை மருத்துவ அதிகாரி மற்றும் மருத்துவமனை ஊழியர்கள், நகர் மன்ற உறுப்பினர்கள் உடன் இருந்தனர்.